பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 06 வியாழக்கிழமை 23.10.2025 கதிர் 347

## இது ரகசியம் அல்ல!

பாதாள உலகத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவின் படுகொலையில் இஷாரா செவ்வந்தி சந்தேகநபராகப் பெயரிடப்பட்டு அவர் பற்றிய தகவல்களைப் ☞ 2

## செவ்வந்தி தொடர்பான அறிக்கை நீதிமன்றத்தில் நேற்று அளிக்கை

பாதாள உலகக் கும்பல் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் முக்கிய சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி மீதான விசாரணைகள் தொடர்பான அறிக்கையை கொழும்பு குற்றப்பிரிவு நேற்று கொழும்பு நீதிவான் மன்றத்தில் சமர்ப்பித்தது.

இஷாரா செவ்வந்தி தற்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

விசாரணைகள் இன்னும் நடைபெற்று வருவதால் சந்தேகநபரை விசாரிக்க பாதுகாப்பு அமைச்சிலிருந்து 90 நாள் தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் முன்னேற்றம் உடனடியாக அறிவிக்கப்படும் என்று பொலிஸார் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.

வழங்கப்பட்ட தகவல்களைக் கருத்தில் கொண்ட நீதிவான், விசாரணையின் முன்னேற்றத்தை தொடர்ந்து தெரிவிக்குமாறு அறிவுறுத்தினார். ☞ 2

## போதைப் பொருள் கடத்தலில் தொடர்பு: பொலிஸ் உயரதிகாரி மீது விசாரணை

பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு போதைப்பொருள் கடத்தலில் தொடர்புண்டு எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

வாராந்திர செய்தியாளர்கள் சந்திப்பில் பொலிஸ் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வூட்லர் இதனைத் தெரிவித்தார். பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு முன்னாள் பணிப்பாளர் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அவர் உறுதிப்படுத்தினார். பாரபட்சமற்ற விசாரணையை எளிதாக்குவதற்காக அந்த அதிகாரி வேறு பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார் என்று அவர் மேலும் கூறினார்.

'தவறுகளில் ஈடுபட்டனர் என்று கண்டறியப்பட்ட எந்தவொரு நபரும் அவரது பதவியைப் பொருட்படுத்தாமல் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் தெளிவான அறிவுறுத்தல்களை பிறப்பித்துள்ளார்,' என்று வூட்லர் கூறினார்.

கடல் வழியாக அதிக அளவில் கடத்தப்பட்ட மெத்தம்பேட்டமைன் (ICE) மற்றும் ஹாஷிஷ் போதைப் பொருள்கள் சிக்கியதைத் தொடர்ந்து இந்த விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

# லசந்தவின் கொலை ஓர் அரசியல் பழிவாங்கலா?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்கிரமசேகர பதவியேற்ற அன்றையதினமே அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. எனவே அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஆளும்தரப்பிடம் பலமுறை வலியுறுத்தியிருக்கின்றோம். ஆனால் அதனை ஆளும்தரப்பு கண்டு கொள்ளவில்லை. அந்த வகையில் இந்தக் கொலை ஒரு அரசியல் பழிவாங்கலா என்ற சந்தேகம் எழுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெலிகம பிரதேசசபை தவிசாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தேசிய பாதுகாப்பு தொடர்பில் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தபோதிலும், ஆளும்தரப்பு அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. குறிப்பாக வெலிகம பிரதேச சபை தவிசாளருக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதையும், அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் ஆளும்தரப்பிடம் தொடர்ந்தும் வலியுறுத்தினோம்.

ஜே.வி.பி.யின் செயற்பாடுகளாலேயே அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பு தேவை ஏற்பட்டது. 1988, 1989களில் நாம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக ☞ 2

## ஒரே வாரத்தில் தங்க விலை 60,000 ரூபா வரை வீழ்ச்சி

கடந்த ஒருவாரத்தில், ஒக்டோபர் 17, முதல் இலங்கையில் தங்கத்தின் விலை கிட்டத்தட்ட ரூ. 60,000 குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் தங்க வியாபாரிகளின் கூற்றுப்படி, நேற்று(22) மட்டும் ரூ.20,000 விலைச் சரிவு பதிவாகியுள்ளது.

கொழும்பு புறக்கோட்டை தங்கச் சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை ரூ.379,200 ஆக இருந்த 22 கரட் தங்கத்தின் விலை ரூ.322,000 ஆக குறைந்துள்ளது.

இதே காலகட்டத்தில் 24 காரட் பவுன் ரூ.410,000 ஆக இருந்த விலை ரூ.350,000 ஆக குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.



லசந்தவுக்கு பாதுகாப்பு வழங்க பொலிஸ் மறுப்பு;

## பாதாள உலகக் குழு என்பது வசதியான ஒரு மூடிமறைப்பு

ஆளும்தரப்பின் பதிலுக்கு ஐமச கண்டனம்

வெலிகம பிரதேசசபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் கொலை தொடர்பான ஆளும்தரப்பின் விளக்கம் 'பாதாள உலக நடவடிக்கை என்ற முத்திரையின் கீழ் வசதியான ஒரு மூடிமறைப்பு' என்று கண்டித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம அமைப்பாளர் ரெஹான் ஜெயவிக்ரம.

சுட்டுக் கொல்லப்பட்ட வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த ஜெயவிக்ரம, தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் நீதிமன்றத்திற்கு வெளியே அல்லது பிரதேச சபை வளாகத்தில் தன்னைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டப்படுவதாகவும் ஓகஸ்ட் மாதமே பொலிஸ்மாஅதிபருக்குத் தெரியப்படுத்தி பாதுகாப்புத் தரும்படி கேட்டிருந்தார். ஆனால் அவருக்குப் பாதுகாப்புத் தரப்படவில்லை என்றும் ரெஹான் தெரிவித்தார்.

லசந்த குறித்து இப்போது பரப்பப்படும் கதைகள் 'புதிதல்ல' என்று நிராகரித்த அவர், அதே குற்றச்சாட்டுகளைப் பல மாதங்களுக்கு முன்பும் ஆளும்தரப்பினர் தெரிவித்திருந்தனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

'கொல்லப்பட்ட லசந்த தனது மிதிகமா தொகுதியில் 67% வாக்குகளைப் பெற்று வென்றார். அவர் ஒரு பட்டியல் ☞ 2

## பாதாள உலகக் குழுத் தொடர்பே லசந்த படுகொலைக்குக் காரணம்

### அவர் மீது 6 குற்ற வழக்குகள் நிலுவையில் ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் விளக்கம்

சுட்டுக் கொல்லப்பட்ட வெலிகம பிரதேசசபையின் தலைவர் லசந்த விக்ரமசேகர பாதாள உலகத்துடன் தொடர்புடையவர் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுக்கள் இடையிலான மோதல்கள் காரணமாகவே அவர் கொல்லப்பட்டார் என்றும் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால், தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் விஜேபால உறுதியளித்தார்.

ஆயுதங்களை வைத்திருக்கும் நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு இடையே ஒரு தெளிவான மோதல் உள்ளது, பொது பாதுகாப்பு அமைச்சர் கூறினார், இன்றைய துப்பாக்கிச் சூடும் அத்தகைய ஒரு சம்பவம் என்று கூறினார்.

லசந்த விக்ரமசேகர மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பொதுப் பிரதிநிதியாக இருந்தபோதிலும், அவர் ஒரு பாதாள உலக நபர் என்றும், அவருக்கு ☞ 2

## ஆழ்கடல் குற்றங்களுக்கு எதிரான சட்டங்களை வலுப்படுத்த அனுமதி

இலங்கையின் ஆழ்கடல்களில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான சட்டங்களை வலுப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 1929ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1978ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்களைச் ☞ 2

## மின் தாக்கி யாழ்ப்பாணத்தில் மாற்றுத் திறனாளி உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் நேற்று மின்சாரம் தாக்கி மாற்றுத்திறனாளி ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த புவனேந்திரன் தேவபாலன் (வயது 47) என்பவரே இவ்வாறு உயிரிழந் தவராவார்.

இவருக்குப் பிறப்பிலேயே கை, கால்கள் என்பன செயற்பாடுகள் அற்றிருந்தன. நேற்று முற்பகல் 10 மணியளவில் தனது வாயினால் மின்சார ஆழியினுள் மின் இணைப்புக்காக வயரைச் சொருக முற்பட்டபோது மின்சாரத்தால் தாக்கப்பட்டார். சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பொலிஸார் வெளிப்படுத்தியபோது, அவர் ஒரு கொலைச் சதிகாரி என்கிற அளவிலேயே மக்களிடம் அறியப்பட்டிருந்தார். பொலிஸாரின் கைகளில் சிக்காமல் பதுங்கியிருக்கும் திறன் படைத்தவராகவும் பார்க்கப்பட்டார். ஆனால் செவ்வந்தி நேபாளத்திலிருந்து இலங்கைக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டபோது மக்கள் மத்தியில் அவரது மதிப்பு 'அழகி செவ்வந்தி' என்கிற அளவிற்கு மாறிவிட்டது.

நேபாளத்தில் இருந்தபொது செவ்வந்தி தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் அதிகம் கவனம் செலுத்தினார் என்று சொல்லப்படுகின்றது. அங்கு பார்ப்பதற்கு வேறு வேலை இல்லை என்பதால் அழகுக் கலைநிலையங்களுக்குச்சென்றுபொழுதைக் கழிப்பதும் வீட்டிலிருக்கும்போதும் தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் நேரத்தைச் செலவழிப்பதுமே அவருக்கிருந்த ஒரே பொழுத்துபோக்கு என்று சொல்லப்படுகின்றது. எப்படியிருந்தாலும் ஒரு கொலைச் சதிகாரி என்கிற இடத்திலிருந்து கொலைச் சதிகார அழகி என்கிற இடத்தை நோக்கி அவர் எடுத்திருக்கும் அவதாரம் மக்களுக்குக் கவர்ச்சியாக இருப்பதால் இப்போதெல்லாம், அவர் நின்றால், இருந்தால், நடந்தால், சரிந்தால், விழுந்தால் செய்தி என்கிற அளவிற்கு ஊடகங்கள் அவர் பெயரைப் பாடுகின்றன.

இந்தப் பரபரப்பு தெற்கில் மட்டுமல்ல வடக்கிலும் பெருமளவில் இருக்கின்றது. செவ்வந்தியைக் கைது செய்யப்பட்டபோது நேபாளத்தில் கைது செய்யப்பட்ட மேலும் 5 பேரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவரும் இருந்த காரணத்தாலும் யாழ்ப்பாணத்தில் இருந்தேதான் இந்தியாவிற்குத்தப்பிச்சென்றார் என்று செவ்வந்தி தெரிவித்திருக்கிறார் என்று செய்திகள் வெளிவந்த காரணத்தாலும் இது தொடர்பான ஆர்வமும் பரபரப்பும் வடக்கிலும் தொற்றிக்கொண்டது.

இந்த விவகாரத்தில் விசாரணை நடத்தும் பொலிஸார் வடக்கிலும் சிலரைக் கைது செய்வார்கள், அந்தக் கைதுகளை இன, மத, சாதியக் கண்ணோட்டத்தில் பார்க்காதீர்கள் என்ற வகையில் ஆளும் என்பிபி தரப்பைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்துக்களும் இதற்கொரு காரணம் எனலாம்.

இந்தப் பின்னணியில் கடந்த சில நாள்களாகவே வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் பொலிஸ் குழுக்கள் பலரையும் தேடி வேட்டையாடிவருகின்றன. பலர் விசாரணைகளுக்காக பொலிஸ் குழுக்களால் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அண்மையில் கிளிநொச்சியிலிருந்தும் இப்படிச் சிலர் பொலிஸ் விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் செவ்வந்திக்கு உதவியவர்கள் என்கிற ரீதியில்தான் தகவல்கள் அரக்கப்பரக்க சமூக ஊடகங்களில் வெளியாகின.

ஆனால், செவ்வந்தி பற்றிய அறிக்கையை நேற்று நீதிமன்றத்தில் அளிக்கை செய்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரோ இதுவரையில் செவ்வந்திக்கு உதவினார்கள் என்கிற குற்றச்சாட்டில் தாம் இருவரை மட்டுமே கைது செய்திருக்கின்றோம் என்று தெரிவித்திருக்கின்றது. அவர்களில் ஒருவர் பொலிஸார் மற்றொருவர் தெற்கைச் சேர்ந்தவர். வடக்கில் யாரும் செவ்வந்தியுடன் தொடர்புடையவர்கள் என்கிற ரீதியில் கைது செய்யப்பட்டனர் என்று நீதிமன்றத்திக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. அப்படியென்றால் அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதுதான் பொலிஸாரின் இதுவரையான நிலைப்பாடு. அவர்களிடம் நடத்தப்படும் விசாரணைகளில் ஆதாரங்கள் கிடைத்தால் வரும் நாள்களில் அவர்கள் கைது செய்யப்படக்கூடும். இன்று வரையில் செவ்வந்தியுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அல்லது அவருக்கு உதவினார்கள் என்கிற குற்றச்சாட்டில் எவரும் உத்தியோகபூர்வமாகக் கைது செய்யப்படவில்லை. ஆனால் பலரிடம் விசாரணைகள் நடக்கின்றன.

உண்மைய இப்படியிருக்கையில் இந்த விடயத்தையும் தமது அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்வதில் தமிழ் அரசியல் தரப்புக்களுக்குள் காழ்ப்புணர்வு பொங்கி வழிகிறது. அதிலும் குறிப்பாக தமிழ் அரசுக் கட்சிக்குள் அந்தக் காழ்ப்புணர்வு பொங்கி வழிவதை வெளிப்படையாகவே காணமுடிகிறது. கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டார் என்று கூறப்படும் பழக்கடை ராஜா எனப்படுபவருக்கும் தமிழ் அரசுக் கட்சியின் உயர்பதவியில் உள்ள ஒருவருக்கும் தொடர்பு என்று காட்ட (இவர் யார் என்று நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியவேண்டுமா என்ன?) மற்றொரு தரப்பு கடந்த சில நாள்களாகவே தலையால் மண்ணைக் கிண்டிக் கொண்டிருக்கின்றது. சில சமூக ஊடகங்களில் இது தொடர்பான தகவல்கள் பரப்பப்பட்டு அதற்காக அந்த ஊடகத் தரப்புக்கள் வாங்கிக் கட்டிக்கொண்டதாகவும் தகவல். பின்னர் தாம் பரப்பிய தகவல்களுக்காக அந்த சமூக ஊடகத் தரப்புக்கள் மன்னிப்பும் கோரியிருந்தன.

ஒரு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றால் வாய்ப்பை உருவாக்கியாவது மற்றவரைக் கீழே தள்ளி விழுத்தி, ஏறி மிதித்து தங்கள் அரசியல் வெறியைத் தீர்த்துக்கொள்ள நினைக்கும் இந்தகைய தரப்புக்கள்தான் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கவும் விரும்புகின்றன என்பதை நினைக்கும்போது தந்தை செல்வா சொன்னதைப் போன்று கடவுள்தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கூடச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் கடவுளாலும் இத்தகைய அரசியல்வாதிகளிடமிருந்து தமிழர்களைக் காப்பாற்ற முடியுமா என்று தெரியவில்லை. .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## லசந்தவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தபோதும், எமக்குப் பாதுகாப்புத் தேவைப்பட்டது. அன்றைய ஆட்சி காலத்தில் எமக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனாலும் நாடாளுமன்றத்தின் மீதுகூட குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதே நிலைமை மீண்டும் உருவெடுகின்றது.

தினந்தோறும் நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் துப்பாக்கிச்சூடுகள் இடம்பெறுகின்றன. இதனால் பலர் கொல்லப்படுகின்றனர். வெலிகம பிரதேசசபை தவிசாளர் கொலையானது அரசியல் பழிவாங்கலா என்பதை முன்னெடுக்கப்படவுள்ள விசாரணைகளின் மூலமே தெரிந்துகொள்ள முடியும். மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதி அவரது அலுவலகத்துக்குள் சுட்டுக் கொல்லப்படுகின்றார் எனில் நாட்டில் பாதுகாப்பு எந்தளவுக்கு பலவீனமடைந்துள்ளது என்பது தெளிவாகிறது.

தவிசாளர் தெரிவுக்கான வாக்கெடுப்பின் போதும் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. சில உறுப்பினர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். இவ்வாறான பின்னணியிலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்த ஆளும்தரப்பின் கீழ் இவ்வாண்டுக்குள் நூறுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. லசந்த தவிசாளராக பதவியேற்ற அன்றைய தினம் நூற்றுக்கணக்கானோர் வரவழைக்கப்பட்டு அங்கு அமைதியின்மை ஏற்படுத்தப்பட்டது. எனவே இதற்கு ஆளும்தரப்பினர் பொறுப்புக்கூறவேண்டும். நீதிமன்ற உத்தரவுகளைக்கூட நடைமுறைப்படுத்த வேண்டாம் என அரசியல்வாதிகள் உத்தரவிடும் நிலைமையை நாடு அடைந்துள்ளது.

இவற்றுக்கு மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளது பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. 1988, 1989களில் ஜே.வி.பியால் ஏற்படுத்தப்பட்ட கலவரத்தின் காரணமாகவே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது. தற்போது அவர்களது ஆட்சியில் அந்த பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்பின் இந்த செயற்பாடுகளால் எதிர்க்கட்சியின் அரசியல்வாதிகள் பாரதூரமான பாதுகாப்பு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் - என்றார்.

## பாதாள உலகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் தேர்ந்தெடுக்கப்படவில்லை; அவர் மக்களிடமிருந்து நேரடியாக வாக்குகளைப் பெற்றுவென்றவர்' என்று ஜெயவிக்ரம கூறினார், ஆளும்தரப்பு இப்போது 'அறியப்பட்ட குற்றவாளி' என்று முத்திரை குத்தும் ஒருவர் தேர்தலில் போட்டியிடவும், வெற்றி பெறவும், பின்னர் பிரதேச சபைத் தலைவராவதற்கும் எவ்வாறு இந்த ஆளும்தரப்பால் அனுமதிக்கப்பட்டார் என்றும் கேள்வி எழுப்பினார்.

லசந்தவுக்கு எதிரான பல வழக்குகள் கோத்தபய ராஜபக்ச நிர்வாகத்தின்போது 'ஊழல் மற்றும் அரசியல் செல்வாக்கு மிக்க காவல்துறை அதிகாரிகளால்' வேண்டுமென்றே போடப்பட்டவை என்றும் அவர் தெரிவித்தார்.

'லசந்தவுக்கும் வேறு பல ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கும் சிறப்பு பாதுகாப்பு பல முறை கோரப்பட்டது. ஆனால் பதில் கிடைக்கவில்லை' என்று அவர் மேலும் கூறினார், கொலை நிகழும் வரை அதிகாரிகள் கண்மூடித்தனமாக இருந்தனர் என்றும் குற்றஞ் சாட்டினார்.

லசந்தவின் கொலையை ஒரு பாதாள உலகப் பிரச்சினையாகக் காட்டி நிராகரிப்பது ஆளும்தரப்பின் பாசாங்குத்தனத்தைக் காட்டுகிறது என்றும் விமர்சித்தார்.

## செவ்வந்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபரின் மீதான கண்காணிப்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் கையாளப்படும் என்றும் நீதிமன்றம் பொலிஸாருக்குத் தெரிவித்தது.

இஷாரா செவ்வந்திக்கு உதவினார்கள் எனவும், ஆதரித்தார்கள் எனவும் கூறப்படும் இருவர் மீதான குற்றச்சாட்டுக்களும் விசாரிக்கப்படுவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் இந்த இரண்டு நபர்களும் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டுள்ளார்களா என்று நீதிவான் விசாரித்தார். அதற்குப் பதிலளித்த பொலிஸார், கொலையில் அவர்கள் சந்தேகநபர்களாகப் பெயரிடப்படவில்லை என்றும், ஆனால் செவ்வந்திக்கு அவர்கள் அளித்த ஆதரவு மற்றும் போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளில் அவர்களின் ஈடுபாடு குறித்து விசாரிக்கப்படுவதாகவும் தெளிவுபடுத்தினர்.

தற்போதைய வழக்கு கோப்பின் கீழ் அந்த இரண்டு நபர்களைப் பற்றியும் உத்தரவுகளை பிறப்பிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று சுட்டிக்காட்டிய நீதிவான், அந்தச் சந்தேகநபர்கள் தொடர்பாகத் தனி பி(ய)-அறிக்கையை வழங்குமாறும் அறிவுறுத்தினார்.

## ஆழ்கடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதன் மூலம் ஆழ்கடல் போதைப்பொருள் குற்றங்களுக்கு எதிரான தண்டனைகளை வலுப்புத்த அமைச்சரவையின் இந்த ஒப்புதல் வழியேற்படுத்தியுள்ளது.

சர்வதேச நீர்நிலைகளில் ஆபத்தான போதைப்பொருள் கடத்தல் தொடர்பான புதிய விதிகளை அறிமுகப்படுத்தவும், அத்தகைய குற்றங்கள் சம்பந்தப்பட்ட குற்றவியல் வழக்குகளை விசாரித்துத் தீர்மானிக்கவும் உயர் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்க இந்தத் திருத்தங்கள் முயல்கின்றன.

இது தொடர்பான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டமா அந்த வரைவுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார். சட்ட வரைவுகளை அரச வர்த்தமானியில் வெளியிடவும், பின்னர் அவற்றை ஒப்புதலுக்காக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## பாதாள உலக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக ஆறு நீதிமன்ற வழக்குகள் உள்ளன என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

'மாத்தறை உயர் நீதிமன்றத்தில் 02 வழக்குகளும், குருநாகல் உயர் நீதிமன்றத்தில் 02 வழக்குகளும், காலி உயர் நீதிமன்றத்தில் 02 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவர் நிறுத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையின் கீழ் உள்ள ஒருவர். அவர் பாதாள உலக நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்' என்று அமைச்சர் கூறினார்.

இந்தோனேசியாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட பாதாள உலக நபர்கள் தொடர்பான விசாரணைகளில் லசந்த விக்ரமசேகர பல ஆயுதங்களை வைத்திருந்தது கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜேபால மேலும் தெரிவித்தார்.

லசந்த ஓர் அரசியல்வாதியாக ஐக்கிய மக்கள் சக்தி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியாக இருந்தாலும், அவர் ஒரு பாதாள உலக நபர் என்று வலியுறுத்தினார்.

இருப்பினும், இன்றைய ஆளும்தரப்பு மனித உயிரின் மதிப்பை மதிப்பதால், ஒரு குற்றவாளியின் இறப்பைக்கூட அங்கீகரிக்காது என்றும் அமைச்சர் கூறினார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடைபெற்று வருவதாக பொது பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். அதற்காக 4 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சட்டம் ஒழுங்கின் தீவிர நடைமுறையாக்க அவசியம்

இலங்கை கடந்த பல தசாப்தங்களாக சட்டமும் ஒழுங்கும் என்ற இரு சொற்களை வெறுமனே கேட்டு வாழும் நிலையில் உள்ளது. அரசியல் தலையீடு, ஆட்சிப் பொறுப்பின்மை மற்றும் தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் ஆகியவை ஒன்றிணைந்து, நாட்டை சட்டத்தின் ஆட்சியிலிருந்து அதிகாரத்தின் ஆட்சிக்குத் தள்ளியுள்ளன. கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற தேசிய மக்கள் சக்தி (NPP) ஆளும்தரப்பு, கட்டமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களுக்கு எதிராக சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், நாட்டின் சட்ட அமலாக்க அமைப்புகள் இயங்கும் முறைமை இன்னும் ஆழமான மாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

இன்று காவல்துறை அமைப்பு தன்னைத்தானே சீர்குலைத்துக் கொண்டிருக்கிறது. எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு சட்ட நடைமுறைப்படுத்தல் பொறுப்பில் உள்ள பல அதிகாரிகள் குற்றக் குழுக்களுடன் இணைந்திருப்பதற்கான ஆதாரங்கள் நாள்தோறும் வெளிப்படுகின்றன. சில அதிகாரிகள் கைது செய்யப்பட்டு பணியிலிருந்து நீக்கப்பட்டாலும், அது வெளிப்படையாகக் காணப்படும் பனிக்கட்டியின் மேல்தளமே அன்றி அதன் அடிப்படையில் உள்ள ஆழமான ஊழல் இன்னும் அசைக்கப்படாமல் நிற்கிறது.

காவல்துறையின் செயல்பாடு இன்று குற்றம் நிகழ்ந்தபின் எதிர்வினை கொடுப்பதிலேயே முடங்கியுள்ளது. அதனால், குற்றத்தைத் தடுக்க முன்கூட்டியே திட்டமிடல், புலனாய்வு மூலம் தடுப்புச் செயல்பாடு மேற்கொள்வது போன்ற அடிப்படைக் காவல் பணிகள் மறக்கப்பட்டுள்ளன. ஒரு பிரதான குற்றச் சந்தேகநபர் நீதிமன்றக் காவலில் இருக்கும் நிலையிலும், அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பது தெரிந்திருந்தபோதிலும், அவர் நீதிமன்றத்தின் உள்ளே சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இதன் தீவிரத்தைக் காட்டுகிறது. காவல்துறை அதனை முன்கூட்டியே உணராமல் இருந்தது மட்டுமல்லாமல், சம்பவ இடத்திலேயே இருந்த சிறப்புப் பாதுகாப்புப் பிரிவினரும் தாக்குதலாளியைத் தடுக்க முடியவில்லை. இது காவல்துறையின் பொறுப்பின்மையின் வெளிப்படையான சான்றாகும்.

கடல் வழிப் போதைப் பொருள் கடத்தல்களைத் தடுக்க கடற்படை மற்றும் கடற்கரை பாதுகாப்புப் படைகள் புலனாய்வு வழித் தலையீடுகளை மேற்கொள்வதைக் காணலாம். ஆனால் அதே நாடு, 'ஐஸ்' மற்றும் 'மெதபெட்டமின் (ஐஸ்)' போன்ற போதைப் பொருள்கள் உள்நாட்டிலேயே தயாராகும் முன் தடுப்பதில் தோல்வியடைந்தது ஏன்? ஒரு பிரதேச சபை தவிசாளரின் கொலையைத் தடுக்கத் தவறியமை ஏன்? இது அமைப்பின் ஊழல், அலட்சியம் மற்றும் தொழில்முறைத் திறனின்மையைக் காட்டுகிறது.

இன்றைய காவல்துறை செயல்பாடு மக்கள் கவனத்திற்கும் ஊடக வெளிச்சத்திற்கும் ஏற்ப மாறுகிறது. குற்றம் எவ்வளவு பிரபலமானதோ, அதற்கேற்ப 'சிறப்பு பிரிவு' என்ற பெயரில் பல குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. அதிகாரிகள் பெயர்கள் ஊடகங்களில் வெளியிடப்படுகின்றன. இதனால் குற்றத்தைக் கட்டுப்படுத்துவதை விட, அதனைச் சுற்றியுள்ள பரப்புரையே முக்கியமாகிறது. சில மணி நேரங்களுக்குள் 'முதன்மைச் சந்தேகநபர்' கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. அவரின் பெயருடன் சேர்த்து வண்ணமயமான பெயர்கள் ஊடகங்களில் பரவுகின்றன. சில நாட்களில் சிலர் கைது செய்யப்படுகின்றனர். அவர்களிடம் கிடைத்த ஆயுதங்கள் ஊடக முன்னிலையில் காட்சிப்படுத்தப்படுகின்றன. ஆனால், சான்றுகள் பாதுகாக்கும் முறைகள் முழுமையாக புறக்கணிக்கப்படுகின்றன.

நீதிமன்றத்தில் ஒரு சட்டவாதி எளிதாகவே சான்றுகளை நிராகரிக்கக் கூடிய நிலையைப் பார்க்கும்போது, காவல்துறைக்கு அறிவியல் சார்ந்த சான்று சேகரிப்பு போதாமையாகவே இருக்கிறது என்பது வெளிப்படுகிறது. காவல்துறையின் வெற்றி என்றால் அது குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டோரின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதேயாகும்; வெற்றிகரமாக நிறைவு பெற்ற வழக்குகளின் எண்ணிக்கையைக் குறித்து இங்கு பெருமை பேசுவது அரிது.

சமூக அழுத்தம், அரசியல் அழுத்தம், ஊடக அழுத்தம் ஆகியவை ஒன்றிணைந்து காவல்துறையின் திசையை மாற்றுகின்றன. சட்டம் என்பது நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இயங்கும் ஒழுங்கு முறை. ஆனால் இன்று அது அரங்கக் காட்சியாக மாறியுள்ளது.

ஆளும்தரப்பு உண்மையாகவே சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநிறுத்த விரும்பினால், காவல்துறையை முழுமையாக மறுசீரமைத்து, புலனாய்வு, தடுப்பு, சான்று மேலாண்மை ஆகிய துறைகளில் தொழில்முறை திறனைக் கட்டியெழுப்ப வேண்டும். குற்றச் செயல்கள் குறைந்தால், மக்கள் நம்பிக்கை உயரும்; காவல்துறை மீது மரியாதை திரும்பும்.

இலங்கை நிம்மதியடைய வேண்டுமெனில், காவல்துறையின் நாடகம் நிறுத்தப்பட்டு, சட்டத்தின் ஆட்சி மீண்டும் நிறுவப்படவேண்டும். இரவு நேரத்தில் மக்கள் தொலைக்காட்சியில் காணும் குற்றத் தொடர்கள் போதுமானவை – வாழ்வில் அதைப் பார்க்க வேண்டிய அவசியம் இனி இருக்கக்கூடாது.

# விமலுக்கு எதிரான ஊழல் வழக்கு விசாரணை டிசெம்பர் மாதத்தில்

அமைச்சராகப் பணியாற்றியபோது சுமார் 75 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் நிதியை சட்டவிரோதமாகச் சேர்த்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு ஆணையத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை டிசெம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி முகமது மிஹால் முன் நேற்று அழைக்கப்பட்டது, அவர் டிசம்பர் 18 மற்றும் ஜனவரி 20 ஆகிய நாள்களில் விளக்கம் இடம்பெறும் என்று அறிவித்தார்.

விசாரணையின் போது, லஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் சார்பாக நீதிமன்றில் முற்பட்ட கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் அசாத் நவவி, வழக்குக்குத் தேவையான அனைத்து தொடர்புடைய ஆவணங்களும் ஏற்கனவே பிரதிவாதிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

பிரதிவாதி தரப்பில் ஆஜரான அரசுத்தலைவர் சட்டத்தரணி அனுர மெத்தேகொட, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ய ஒரு நாளைக் கோரினார்.

2010 மற்றும் 2015க்கு இடையில், அமைச்சராகப் பணியாற்றியபோது, விமல் வீரவன்ச தனது சட்டப்பூர்வ வருமானத்தைவிட அதிகமாக சொத்துக்கள் மற்றும் நிதிகளைச் சம்பாதித்து, லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்தார் என்று கூறி, நல்லாட்சிக் காலத்தின்போது இந்த வழக்கு முதலில் தாக்கல் செய்யப்பட்டது.

# ஆசிரியர்கள் இடமாற்றத்தை எதிர்த்து கிளிநொச்சியில் நாளை போராட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை ஆட்சேபித்து நாளை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனை முன்பாக ஆசிரியர்களின் போராட்டம் இடம்பெறவுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் இன்னாசிமுத்து சத்தியசீலன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சேவையின் தேவை கருதிய என்ற போர்வையில் 2026ஆம் ஆண்டு ஆசிரியர் இடம்மாற்றம், வடமாகாண கல்வியமைச்சினால் முறைகேடான முறையில் - நீதிக்கு புறம்பான வகையில் - இடம்பெற்றிருக்கிறது. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 82 ஆசிரியர்களுக்கு இடம்மாற்றம் வந்துள்ளது. இந்த இடம்மாற்றத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. ஆசிரியர்களின் நலன்களைக் கருதாமல் - கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலமையைக் கருதாமல் - போரினால் கல்வியை இழந்து பின்தங்கியுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வியை மேலும் பாதிக்கின்ற வகையில் இந்த இடமாற்றம் இடம்பெற்றிருக்கின்றது.

இடமாற்றம் பெற்றுள்ள 82 ஆசிரியர்களில் கிட்டத்தட்ட 60 பேர் வரை 2009 போர்க் காலத்தில் பதுங்கு குழிகளில் எறிகணைகளுக்கு மத்தியில்கூட கடமையாற்றியவர்கள். அவர்களின் கடந்த கால சேவைகளை ஆராயாமல் இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன. போர் முடிய உயர் கல்வியைக் கற்று ஆசிரியர் தொழிலுக்கு வந்தவர்களுக்குக்கூட இந்த இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. புவிசார் நிலமைகளைக்கூட ஆராயாமல் ஒவ்வொரு பாட சாலைகளுக்கும் இடையில் பல கிலோ மீற்றர் தூரம் கொண்ட கிராஞ்சி, வேரவில் போன்ற போக்குவரத்து வசதியில்லாத இடங்களில் பல வருடங்களாகக் கடமையாற்றியவர்களையும் இடம்மாற்றத்திற்கு உட் படுத்தியுள்ளனர்.

ஆசிரியர் பற்றாக்குறை மாவட்டத்தில் நிலவுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் வெற்றிடங்களை நிரப்பிக் கொண்டு ஆசிரியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இடம்மாற்றத்தை வழங்கவேண்டும். தற்போது வெளியிட்டுள்ள ஆசிரிய இடம்மாற்றத்தை இரத்து செய்ய வலியுறுத்தி ஒக்டோபர் 24 பிற்பகல் 2 மணிக்கு கிளி நொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனை முன்பாகப் போராட்டம் இடம்பெறவுள்ளது. போராட்டத்தில் அனைத்து ஆசிரியர்களையும் பொது அமைப்புக்களையும் பெற்றோர்களையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பும் விடுக்கின்றோம் - என்றார்.

# இறக்குமதி வெங்காயம், உ.கிழங்கு மீதான வரியை அதிகரிக்க அனுமதி

2025 சிறுபோகப் பருவத்தில் உள்ளூர் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு மீதான சிறப்புப் பொருட்கள் வரியை (ரீஎஸி) அதிகரிக்கும் ஆளும்தரப்பின் நடவடிக்கைக்கு நாடாளுமன்ற பொது நிதிக் குழு (ஸீநுணய்) ஒப்புதல் அளித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நேற்று நடைபெற்ற பொது நிதிக் குழுக் (கோப்) கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் மீதான வரியை 10 ரூபாயால் உயர்த்தி, ரூ. 40 லிருந்து ரூ. 50 ஆக்கவும், இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மீதான வரியை ரூ. 20 ஆல் உயர்த்தி, ரூ. 60இலிருந்து ரூ. 80 ஆக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது ஆகஸ்ட் 26, 2025 முதல் நடைமுறைக்கு வருகிறது.

நிலையான, வெளிப்படையான மற்றும் கணிக்கக்கூடிய கட்டணக் கட்டமைப்பை உறுதி செய்வதற்காக, தேசிய கட்டணக் கொள்கையுடன் தற்போதுள்ள சட்டங்களை இணைக்க வர்த்தக அமைச்சகம் மற்றும் நிதி அமைச்சகத்திற்கு கோப் குழு பரந்த உத்தரவுகளைப் பிறப்பித்தது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN LAPTOPS
NALIN Information Technologies Pvt Ltd.
DIWALI MEGA OFFER
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER
MEGA OFFER
hp
3 years warranty
Windows 11
ASUS
3 years warranty
Windows 11
M365
msi
DELL
1 years warranty
Windows 11
Lenovo
2 years warranty
Windows 11
2 years warranty
STARTING PRICE -RS: 137,000/=
Installment Payment Allowed
BOC
COMMERCIAL BANK
HNB
VISA
MasterCard
Terms & Conditions Apply
hp DELL ASUS Lenovo msi
Island wide free delivery
Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610

காலைக்கதிர் Kalaikkathir






# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:

- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.10.2025இல் வெளியிடப்பெற்றது